என்ற கருத்துக்காகக் கொடுத்திருக்கிறார்கள். விலையேற்றம் என்பது திடீரென்று ஏற்பட்டுவிடக்கூடியது அல்ல. ஆகவே, இது இந்த அவையை ஒற்றிவைத்து விவாதிக்கக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(அ) எண்ணூரில் மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டத்தினால் பீதியடைந்துள்ள மலையாளிகள் நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதாவது—

எண்ணூர் பிரதேசத்தில் "மலையாளிகள் ஆதிக்க எதிர்ப்பு பொதுக் கூட்டம்" என்று போட்டு பலர் வெறித்தனமாகப் பேசியுள்ள போக்கைப் பற்றியும் அதனால் பீதி அடைந்துள்ள மலையாளிகளின் நிலைமையைப்பற்றியும் விவாதிக்க" என்று கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இப்பொருள் குறித்து விரிவான விளக்கம் தந்திருக்கின்ற காரணத்தினால் நான் இதற்கு அனுமதிதர மறுக்கிறேன்.

THIRU A. A. SUBBA RAJA: Sir, on a point of information.

MR. SPEAKER: No point of information now.

3. நடைமுறைக் கேள்விகள்

(அ) வினா நேரம் முடிந்தவுடன் தகவல் கோருவதற்கு உறுப்பினர்களுடைய உரிமை

THIRU K. VINAYAKAM: Sir, on a point of order. In any Parliament or Legislature as soon as the question-hour is over—it is known as the zero hour—and before the regular agenda for the day is taken up, if any hon. Member is handicapped for want of information, information may be asked—it is also in the interest of the Government—and also to enlighten the House information may be asked. It is also the practice even in the Parliament for any hon. Member to raise a point of information. Of course, after finding out whether the point raised is relevant or not, the Chair can reject it or not. But it is the privilege of any hon. Member to ask for any information on the face of the Earth and under the Sun.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய திரு வினாயகம் அவர்கள் ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை என்பது, நான் ஏற்கெனவே சொல்லியிருப்பதைப்போல், நமது சட்டமன்ற விதிமுறைகளிலிருந்து மாறாக ஏதாவது நடந்தால் அப்பொழுது வரும். திரு வினாயகம் அவர்கள் சொல்லுகின்ற "ஸீரோ ஹவர்" நமது விதிமுறைகளில் இடம் பெற்றிருக்கவில்லை. ஆகவே, எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.